**சட்டப் பிரிவு என்ன சொல்கிறது**

ஒப்பந்தச் சட்டத்தின் பிரிவு 10, செல்லுபடியாகும் ஒப்பந்தத்திற்கான நிபந்தனையாக, சட்டப்பூர்வ மறுபயன் மற்றும் சட்டப்பூர்வ நோக்கம் வேண்டும் என்று கூறுகின்றது. சட்டத்தின் பிரிவு 23, சட்டப்பூர்வ மறுபயன் மற்றும் சட்டப்பூர்வ நோக்கத்தை வரையறுக்கிறது. பிரிவு 25, சில விதிவிலக்குகளுக்கு உட்பட்டு, மறுபயன் இன்றி செய்யப்பட்ட ஒப்பந்தம் செல்லாது என்று கூறுகின்றது.

இப்பிரிவின்படி, ஒரு ஒப்பந்தத்தின் மறுபயன் அல்லது நோக்கம் பின்வருவனவற்றில் உட்படவில்லை என்றால், சட்டபூர்வமானது.

- சட்டத்தால் தடை செய்யப்பட்டுள்ளது; அல்லது
- அனுமதிக்கப்பட்டால், எந்தவொரு சட்டத்தின் விதிகளையும் அது தோற்கடிக்கும் இயல்புடையது; அல்லது
- மோசடியானது; அல்லது
- மற்றொருவருடைய உடலுக்கு அல்லது சொத்துக்குக் கேடு செய்தலை உள்ளடக்கியதாக அல்லது உட்கிடையாகக் (involves or implies) கொண்டதாக இருக்கின்றது, அல்லது
- நீதிமன்றம் அதை ஒழுக்கக்கேடானதாக அல்லது பொதுக் கொள்கைக்கு எதிரானதாகக் (immoral, or opposed to public policy) கருதுகிறது.

ஒரு உடன்பாட்டின் நோக்கமோ அல்லது மறுபயனோ, இவற்றில் ஒன்றாக இருக்குமானால், உடன்பாட்டின் நோக்கம் அல்லது மறுபயன், சட்ட முரணானது எனச் சொல்லப்படும். நோக்கம் அல்லது மறுபயன், சட்ட முரணானதாக இருக்கும் ஒவ்வோர் உடன்பாடும் செல்லாதது (void) ஆகும்.

1. **சட்டத்தால் தடை செய்யப்பட்டது**

ஒரு ஒப்பந்தத்தின் நோக்கம் அல்லது மறுபயன், சட்டத்தால் தடை செய்யப்பட்டால், ஒப்பந்தம் சட்ட விரோதமானது மற்றும் செல்லாது. சட்டம் என்று கூறப்படுவது, இந்தியாவில் நடைமுறையில் உள்ள சட்டம் மற்றும் இந்து மற்றும் முகமதிய சட்டங்கள் போன்ற எழுதப்படாத சட்டங்களின் கொள்கைகளையும் உள்ளடக்கியது.

எடுத்துக்காட்டு: பணத்திற்காக கொலை செய்ய ஒரு உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டால், உடன்படிக்கை செல்லாது மற்றும் செயல்படுத்த முடியாது.

2. **எந்தவொரு சட்டத்தின் விதியையும் தோற்கடித்தல்**

சில சந்தர்ப்பங்களில், ஒரு ஒப்பந்தத்திற்கான நோக்கம் அல்லது மறுபயன் சட்டத்தால் நேரடியாகத் தடை செய்யப்படாமல் இருக்கலாம். ஆனால் அனுமதிக்கப்பட்டால், அது சட்டத்தின் விதிகள் அல்லது நோக்கத்தை தோற்கடித்துவிடும். அத்தகைய ஒப்பந்தமும் செல்லாது.

எடுத்துக்காட்டு:

- வரி செலுத்தத் தவறியவரே, நிலச் சொத்தினை வாங்குவதைத் தடுக்கும் சட்டத்தின் வகைமுறைகளின்படி, 'அ' என்பவரின் சொத்து வரி நிலுவைக்காக விற்பனை செய்யப்படுகிறது.
- 'ஆ என்பவர் 'அ' வுடனான ஓர் ஏற்பாட்டின் பேரில் வாங்குநர் ஆகிறார்.

- 'ஆ' செலுத்திய விலையை 'அ' விடமிருந்து பெற்றுக் கொள்வதன் பேரில் சொத்தினை அவருக்கு எழுதிக் கொடுத்துவிட உடன்படுகிறார்.
- அந்த நடவடிக்கை, வரி செலுத்தத் தவறியவரை வாங்குநராக ஆக்குவதாலும், அதன் மூலம் சட்டத்தின் நோக்கத்தைப் பயனற்றதாக்கிவிடும் என்பதனாலும், அந்த உடன்பாடு செல்லாதது ஆகும்.

**உச்ச நீதிமன்றம்: ஜி.டி. கிரீஷ் எதிர் ஒய். சுப்ப ராஜு (G.T. Girish Vs. Y. Subba Raju: 2022 Latest Caselaw 59 SC)**

- பிரிவு 23 உட்பிரிவுகள் (1) மற்றும் (2) நோக்கங்களுக்காக 'சட்டம்' வேறுபட்டதாக இருக்க முடியாது. சட்டமன்றத்திலிருந்து பெறப்பட்ட அதிகாரத்தின் கீழ் செய்யப்பட்ட ஒழுங்குமுறைகள் அல்லது ஆணைகள் (regulations and order) துணைச் சட்டத்தின் வகைகள் என்பது மிகத் தெளிவாக உள்ளது. எனவே, துணை சட்ட விதிகளும், தெளிவாக சட்டமாக இருக்கும்.
- ஒரு ஒப்பந்தம், வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ சட்டத்தின் விதிகளால் தடை செய்யப்படலாம். கட்சிகளின் நோக்கங்கள் அத்தகைய ஒப்பந்தத்தை காப்பாற்றாது.
- விற்பதற்கான ஒப்பந்தம் எழுதப்படும் போது, அதன் கீழ் விற்பனையாளரின் உரிமையை முழுமையடையச் செய்யவும், விற்பனை நடை பெறவும், ஒரு ஆணையத்தின் அனுமதி அல்லது ஒப்புதல் தேவை என்றால், அந்த விற்பனை முற்றிலும் தடை செய்யப்படவில்லை. அப்படியானால், அத்தகைய ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தக் கூடியது மற்றும் இந்திய ஒப்பந்தச் சட்டம், 1872 இன் பிரிவு 23 இன் விதிகள் பொருந்தாது.

3. **மோசடி நோக்கம்**

மோசடி நோக்கத்திற்காக செய்யப்பட்ட எந்த ஒப்பந்தமும் செல்லாது மற்றும் செயல்படுத்த முடியாதது. ஒரு ஒப்பந்தம், இந்த வகைக்குள் வருவதற்கு ஏமாற்றும் எண்ணம் அவசியம்.

**அலெக்சாண்டர் எதிர் ரேசன் (Alexander v Rayson: CA 1936)**

- அலெக்சாண்டர், திருமதி ரேசனுக்கு £1,200 க்கு ஒரு குடியிருப்பை வாடகைக்கு விட்டார்.
- இருப்பினும், வரிவிதிப்பு நோக்கத்திற்காக அடுக்குமாடி குடியிருப்பின் மதிப்பிடக் கூடிய மதிப்பைக் குறைக்க, அலெக்சாண்டர் அவருக்கு, £450க்கு குடியிருப்பின் குத்தகை மற்றும் £750க்கான சேவைகளுக்கான (amenities) ஒப்பந்தம் என இரண்டு ஒப்பந்தங்களை வழங்கினார். .
- இந்த ஒப்பந்தம், வரி வருவாய்த்துறைக்கு எதிரான மோசடியாக அமைந்தது என்றும், அலெக்சாண்டரால் இரண்டு ஒப்பந்தத்தின் கீழும் பணத்தை மீட்க முடியாது எனவும் தீர்ப்பளிக்கப்பட்டது.

4. **நபர் மற்றும் சொத்துக்கு (person and property) தீங்கு விளைவிக்கும்**

ஒரு ஒப்பந்ததின் நோக்கம் அல்லது மறுபயன், மற்றவரின் உடல் அல்லது சொத்துக்களை காயப்படுத்துவது என்பதாக இருக்கின்றது என்றால், அது

சட்ட விரோதமானது. அந்த ஒப்பந்தம் செல்லாதது மற்றும் செயல்படுத்த முடியாதது.

எடுத்துக்காட்டு: கடன் வாங்குபவர் இரண்டு ஆண்டுகள், ஊதியம் இல்லாமல் வேலை செய்ய வேண்டும் என்பது, ஒரு நபருக்கு தீங்கு விளைவிக்கும் ஒப்பந்தமாகும்.

5. **ஒழுக்கக் கேடானது (immoral)**

ஒழுக்கக் கேடான நோக்கம் அல்லது ஒழுக்கக் கேடான மறுபயன் கொண்ட அனைத்து ஒப்பந்தங்களும் சட்ட விரோதமானவை. ஒழுக்கக் கேடானது, எது என்பது, அந்தக் குறிப்பிட்ட நேரத்தில் சமூகத்தில் நிலவும் ஒழுக்கத் தரங்களின் அடிப்படையில் நீதிமன்றங்களால் முடிவெடுக்கப்படும். ஆனால், விபச்சாரம் போன்ற சில செயல்கள் பழங்காலத்திலிருந்தே ஒழுக்கக் கேடானதாகக் கருதப்படுகிறது.

எடுத்துக்காட்டு: ஒரு திருமணமான பெண்ணுக்கு அவள் கணவனிடமிருந்து விவாகரத்து பெறுவதற்கு பணம் கொடுக்கப்பட்டது. பணம் கொடுத்தவர் அவளை பின்னர் திருமணம் செய்து கொள்வதாக உறுதியளித்தார். பணம் கொடுத்த நோக்கம் ஒழுக்கக் கேடானது. பணத்தை திரும்பப் பெற முடியாது.

**பொதுக் கொள்கைக்கு எதிரானது (opposed to public policy)**

ஒரு ஒப்பந்தம், பொதுக் கொள்கைக்கு எதிராக இருந்தால், அது சட்ட விரோதமானது. பொதுக் கொள்கையின் கருத்து அவ்வப்போது மாறிக் கொண்டே இருக்கிறது. நீதிமன்றங்கள் கருத்தை விளக்குகின்றன. பொதுவாக, பொது நலனுக்கு எதிரான அல்லது பொது நலனுக்கு தீங்கு விளைவிக்கும் போக்கு கொண்ட ஒப்பந்தங்கள், பொதுக் கொள்கைக்கு எதிரானதாகக் கருதப்படுகிறது.

எடுத்துக்காட்டுகள்:

- மருத்துவக் கல்லூரியில் படிக்க இட விற்பனை, பொதுக் கொள்கைக்கு எதிரானது.
- வழக்கின் முடிவின்படி, ஒரு வாடிக்கையாளர், தனது வழக்கறிஞருக்கு பணம் செலுத்துவதற்கான ஒப்பந்தம் பொதுக் கொள்கைக்கு எதிரானது.

**உச்ச நீதிமன்றம்: மத்திய உள்நாட்டு நீர் நிறுவனம் எதிர். ப்ரோஜோ நாத் கங்குலி (Central Inland Water corporation vs Brojo Nath Ganguly: 1986 AIR 1571)**

- பொதுக் கொள்கையை (public policy) நிர்வகிக்கும் கொள்கைகள் சரியான சந்தர்ப்பத்தில் விரிவாக்கம் அல்லது மாற்றியமைக்கும் திறன் கொண்டதாக இருக்க வேண்டும். ஒரு காலத்தில் முற்றிலும் இயல்பானதாகக் கருதப்பட்ட நடைமுறைகள், இன்று பொது மனசாட்சிக்கு எதிரானதாக மாறியுள்ளன.
- ஒரு வழக்குக்கு பொருத்தமான பொதுக் கொள்கை இல்லை என்றால், நீதிமன்றம் பொது மனசாட்சிக்கு இசைவாகவும், பொது நலன் மற்றும் பொது அக்கறையைக் கருத்தில் கொண்டும், அத்தகைய நடைமுறையை பொதுக் கொள்கைக்கு எதிரானது என்று அறிவிக்க வேண்டும்.

- எல்லாவற்றிற்கும் மேலாக, அதிகாரத்தின் கீழ் வராத எந்தவொரு வழக்கையும் தீர்ப்பதில், நமது நீதிமன்றங்களின் முன் அரசியலமைப்பு சட்டத்தின் முகவுரை (Preamble to the Constitution) எனும் கலங்கரை விளக்கம் வைக்கப்பட்டுள்ளது. முன் தீர்ப்புகள் இல்லை என்றால், அந்த வெளிச்சம் மற்றும் நமது அரசியலமைப்புச் சட்டத்தில் பொதிந்துள்ள அடிப்படை உரிமைகள் மற்றும் வழிகாட்டுதல் கோட்பாடுகளின் (Fundamental Rights and the Directive Principles) அடிப்படையிலான கொள்கைகள் நீதிமன்றத்தை எப்போதும் வழிநடத்தும்.